# நடப்பு நிகழ்வுகள்- செப்டம்பர் 12 - 2017

- ❖ மகாகவி பாரதியாரின் 96-வது நினைவு நாள் செப்டம்பர் - 12.

- ❖ உடல் உறுப்பு தானத்தில், தேசிய அளவில் தமிழகம் முதலிடத்தை வகிக்கிறது. "தமிழ்நாடு உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையம் 2014 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- ❖ இந்தியா ஆப்கானிஸ்தான் நாடுகள் இடையே மோட்டார் வாகனங்கள் உள்ளிட்ட 4 முக்கிய ஒப்பந்தங்கள் (11.09.17) கையெழுத்தாகியுள்ளன. டெல்லியில் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் சலாஹுதீன் ரப்பானி ஆகியோர் முன்னிலையில் கையெழுத்திடப்பட்டன.

- ❖ அனைவருக்கும் கல்வி இயக்கம் 'ஸ்வச் வித்யாலயா புரஸ்கார்' திட்டத்தில் சுத்தமான குடிநீர், சுகாதாரமான கழிப்பறைகள், சோப்புடன் கூடிய கை கழுவும் வசதி மற்றும் பராமறித்தல். நடத்தை மற்றும் திறன் உயர்த்துதல் ஆகியவற்றில் மாநில அளவில் எருமாடு அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி தேசிய விருதுக்கு தேர்வு செய்யப்பட்டது.

- ❖ "பினாமி" சொத்து பரிவர்த்தனை குறித்து ரகசிய தகவல் கொடுப்பவர்களுக்கு அந்த சொத்து மதிப்பில் 10 சதவீதத்தை பரிசாக வழங்க வருமான வரித்துறையின் புலனாய்வு துறை முடிவெடுத்துள்ளது.

- ❖ 'வாட்ஸ்அப்' உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி தனிப்பட்ட விவரங்களை பாதுகாக்கும் விஷயத்தை ஆராய ஓய்வுபெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி பி.என்.கிருஷ்ணா தலைமையில் துறைசார்ந்த வல்லுனர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது

- ❖ மைக்ரோசாப்ட் நிறுவனர் பில்கேட்சின் "பில்கேட்ஸ் பவுண்டேஷன்" உதவியுடன் "செப்டிக் டேங்க் மற்றும் பாதாளசாக்கடை கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான முதற்கட்ட ஆலோசனைகள் நடைபெற்றுள்ளது.

OXFORD IAS ACADEMY

- 7 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கற்கால மனிதர்கள் வாழ்ந்த குகை மற்றும் பாறை ஓவியங்கள் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் மீனாட்சிபுறத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- சுதந்தி போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களின் ஒய்வூதியத்தை உயத்தியுள்ளது. சுதந்தி போராட்ட தியாகிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ரூ12,000தில் இருந்து ரூ13,000 ஆகவும். அவர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை 6,000தில் இருந்து 6,500 ஆகவும் தமிழக அரசு உயர்த்தியுள்ளது.

- மூட்டுகளில் வலி மற்றும் விறைப்புத்தன்மையை ஏற்படுத்தி பின்பு குறுத்தெலும்பு சிதைவுவரை இட்டுச்செல்லும் முதுமை மூட்டழற்சி நோய்க்கான குறைந்த கட்டண சிகிச்சை முறையை IIT ரூர்க்கி ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

- 2017 ஆடவர் ஒற்றையர் US ஓபன் டென்னிஸ் போட்டியில் கெவின் ஆண்டர்கனை வீழ்த்தி ரஃபேல் நடால் கோப்பையை வென்றுள்ளார். இது நடாலின் 16வது கிராண்ட்ஸ்லாம் பட்டமும், 3வது அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் பட்டமுமாகும்.

- 2017 மகளிர் ஒற்றையர் US ஓபன் டென்னிஸ் போட்டியில் மேடிசன் சீசை வீழ்த்தி அமெரிக்க வீராங்கனை ஸ்லோன் ஸ்டீபன்ஸ் வென்றுள்ளார். இது இவரது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டமாகும்.

- புது டெல்லியில் Society of Indian Law Firms மற்றும் மேனன் சட்ட ஆலோசனை பயிற்சி நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய 9வது ஆசிரியர் தின விருது வழங்கும் விழாவில் புகழ்பெற்ற நீதிபதி Dr.தாஹிர் மஹ்மூத் தான் சட்டதுறைக்கு ஆற்றிய பங்களிற்பிற்காக கௌரவமிக்க “பேராசிரியர் N.R.மாதவ மேனன் சிறந்த சட்ட ஆசிரியர்” விருதை வென்றுள்ளார்.

- இந்தியாவின் அசோசியேட்டட் சேம்பர்ஸ் ஆஃப் காமர்ஸ் (ASSOCHAM) நடத்திய ஆய்வில் கர்நாடக மாநிலம் சிறப்பான உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறுது. கேரளா இரண்டாவது இடத்தில் உள்ளது.